# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11880

B/SPL-BLDG/71 A to F/2018 Date of Permit 12.4.2018

File No. B2/6042/2017

Name of Applicant with Address Mr. M.R. GOVINDAN & Mr. MOHAMED ISMAIL & Md. Imran Faraque Padashah (GPA holders) Rep. by No. J-118, MMDA Colony, LIC colony Arumbakkam, Chennai - 106

Date of Application 2.5.2017

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Change in use of Land/Building~~

Proposed construction of Stilt Floor + 4 Floors

Site Address Residential building with 126 DU together with Gym @ 1st floor at Umanchari Main Road, Kolapakkam, Chennai - 48

Division No comprised in S.No. 138/1,2,3, 139/3 (Doc) S.No. 138/1A, 1B, 139/3 (Patta) of Kolapakkam village, within Kattankulathur Panchayat Union Limit.

Development Charge paid Rs 75,000/- Challan No 5058 Date 31.01.2013 remitted in the earlier Approved File No. EC/S-E/5229/16

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building construction/~~change in use of land/building~~ according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 11.4.2023

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

13/04/2018

For MEMBER SECRETARY

9.4.2018

அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
ஆணையாளர்
காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம்
காட்டாங்குளத்தூர்
சென்னை.

கடித எண்.: பி2/6042/2017 01427 தேதி: 12.4.2018

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண்.138/1,2,3 மற்றும் 139/3, (பத்திரத்தின்படி), நில அளவை எண்.138/1A,1B மற்றும் 139/3 (பட்டாவின்படி), கொளப்பாக்கம் கிராமம், உம்மங்சேரி பிரதான சாலை, கொளப்பாக்கம், சென்னை–48ல் வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் 126 குடியிருப்புகள் மற்றும் முதல் தளத்தில் உடற்பயிற்சிக்கூடத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்பு கட்டிடப் பிரிவு எண்.BS2/2017/000258 நாள் 2.5.2017அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண். 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை, ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 9.9.2009.
3. அரசாணை (பல்வகை) எண்.86, ந.வ.துறை, ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 28.3.2012
4. ஏற்கனவே திட்ட அனுமதி வழங்கப்பட்ட கடித எண்.B1/14211/2010 நாள் 28.3.2013.
5. அரசாணை (பல்வகை) எண். 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 30.12.2013 (த.நா.அ. அறிக்கை வெளியீட்டு நாள் 29.01.2014).
6. ஏற்கனவே வழங்கப்பட்ட புதுப்பித்த திட்ட அனுமதி வழங்கப்பட்ட கடித எண்.EC/S-I/5229/2016 நாள் 20.5.2016.
7. அரசாணை (பல்வகை) எண்.85, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 16.5.2017.
8. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கடித எண்.6188/UD-4(3)/2017-8 நாள் 13.6.2017.
9. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 17.11.2017.
10. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 18.12.2017, 18.1.2018 மற்றும் 5.2.2018.
11. நீதிப் பேராணை எண்.W.P.No.31988 of 2017 and WMP Nos.35147 & 35148 of 2017.
12. கட்டிட வைப்பு நிதி ரூ.21,88,000/–க்கான கனரா வங்கியிடம் பெறப்பட்ட வங்கி உறுதி பத்திரம் எண்.11/2018 நாள் 1.3.2018.

*******

நில அளவை எண்.138/1,2,3 மற்றும் 139/3, (பத்திரத்தின்படி), நில அளவை எண்.138/1A,1B மற்றும் 139/3 (பட்டாவின்படி), கொளப்பாக்கம் கிராமம், உம்மங்சேரி பிரதான சாலை, கொளப்பாக்கம், சென்னை–48ல் வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் 126 குடியிருப்புகள் மற்றும் முதல் தளத்தில் உடற்பயிற்சிக்கூடத்துடன் கூடிய கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை–1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–9ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. இந்த திட்ட அனுமதியானது பார்வை–4 மற்றும் 6இல் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான திருத்திய திட்ட அனுமதியாகும். எனவே, பார்வை–6இல் வழங்கப்பட்ட திட்ட அனுமதி இதனால் ரத்து செய்யப்படுகிறது. பார்வை–9இல் வழங்கப்பட்ட திட்ட அனுமதியின் போது கீழ்கண்ட கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டு இத்திட்டத்தில் ஈடு செய்யப்பட்டது.

| விவரங்கள் | ஏற்கனவே பி1/14211/2010 என்ற கோப்பில் 31.1.2013 நாள் கடிதத்தின் படி கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார் | மீதமுள்ள கட்டணங்களை இதே எண் கொண்ட கோப்பில் 18.12.2017 நாள் கடிதத்தின் படி கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார் |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.1,75,000/– ரசீது எண். 5058 நாள் 31.1.2013 | இல்லை |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | – – | ரூ.7.200/– ரசீது எண்.B006238 நாள்18.12.2017. |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ.7,00,000/– ரசீது எண்.535 நாள் 31.1.2013 | ரூ.21,88,000/– கனரா வங்கியிடம் பெறப்பட்ட வங்கி உறுதி பத்திரம் எண்.11/2018 நாள் 1.3.2018. |
| கழிவுநீர் தொட்டிற்கான காப்புறுதி கட்டணம் | ரூ.92,00,000/– ரசீது எண்.535 நாள் 31.1.2013 | ரூ.34,00,000/– ரசீது எண். B006238 நாள்18.12.2017. |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/– ரசீது எண்.535 நாள் 31.1.2013 | ரூ.10,000/– ரசீது எண். B006238 நாள்18.12.2017. |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ.37,00,000 ரசீது எண் 5059 நாள் 31.1.2013 | இல்லை |

மேற்கூறிய கட்டணங்கள் அனைத்தும் தற்போதைய திருத்திய திட்ட அனுமதி கட்டணத்தில் சரிசெய்யப்பட்டு மீதிதொகை வசூலிக்கப்பட்டது.

இந்த திட்ட அனுமதியானது பார்வை–4 மற்றும் 6இல் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான திருத்திய திட்ட அனுமதியாகும். எனவே, பார்வை–4 மற்றும் 6இல் வழங்கப்பட்ட திட்ட அனுமதி இதனால் ரத்து செய்யப்படுகிறது.

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிளுக்கான வடிவமைப்புகளைள உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அதன்மீது அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. எண் பி/சிறப்புக் கட்டிடம்/71 – **A முதல் F வரை/2018** நாள் **12.4.2018** என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி **12.4.2018** இருந்து **11.4.2023** வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருத்தியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. விண்ணப்பதாரர் தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்திடம் ஒப்புதல் பெற்று அதற்குரிய பதிவு எண்ணை விண்ணப்பதாரர் கட்டிட முழுமை சான்றிதழ் விண்ணப்பம் விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

13. "தமிழ்நாடு அரசு, அரசாணை எண் G.O.Ms.No.112, H&UD Dept. நாள் 22.6.2017–ல் கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மனை/கட்டிடம் விற்பவர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், அக்கட்டிட, மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது."

14. விண்ணப்பதாரர் சமர்பித்த உறுதிமொழிப் பத்திரப்படி பார்வை 11ல் கண்ட நீதிப் பேராணை எண்.W.P.No.31988 of 2017 and WMP Nos.35147 & 35148 of 2017ல் கூறப்பட்ட முடிவிற்கு கட்டுப்பட்டு அதன் தீர்ப்பின்படி Shelter Fee செலுத்த வேண்டியிருப்பதால், இவ்வலுவலக இதே எண் கொண்ட கடித நாள் 17.11.2017ன்படி Shelter Fee செத்த ஒப்புக்கொண்டதன் பேரில் இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

13/04/2018

முதன்மை செயலர் /
உறுப்பினர்–செயலருக்காக

13/4/18

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:
1. திருவாளர்கள் எம்.ஆர்.கோவிந்தன் அவர்களின் பொது அதிகாரம் பெற்றவர்கள்
முகம்மது இஸ்மாயில் மற்றும் இம்ரான் தரக் பதார்ஷா
எண்.J-118, MMDA காலனி
அரும்பாக்கம், சென்னை– 600 106

2. உறுப்பினர்
உரியதுறை (Appropriate Authority)
108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

3. வருமானவரி ஆணையர்
168, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

4. துணைதிட்ட அமைப்பாளர்
செயலாக்கப்பிரிவு (தெற்கு), செ.பெ.வ.குழுமம், சென்னை– 600 008

ANNEXURE

FORM -I

FORMAT FOR DISPLAY OF PARTICULARS OF DEVELOPMENT PERMITTED (MULTI-STOREYED BUILDINGS & SPECIAL BUILDINGS)

DEVELOPMENT: Umamohani Main Road, Kolapakkam, Chennai - comprised in New S.No. 138/1A, 1B, 139/3 (Patta), S.No. 138/1,2,3, 139/3 (Doc), of Kolapakkam village, within Kattankulathur Panchayat Union Limit

1. Name and address of the Promoter/developer/owner — M.R. Govindaraj & P. MOHAMED ISMAIL. No: J-118, M.M.D.A. colony, Arumbakkam, Ch-106.

2. Name and address of the Architect/licensed surveyor/ Engineer — VARSHA P. JAIN (B.arch)
ARCHITECT & INTERIOR DESIGNER
REGD No. CA / 95 / 18498
COUNCIL OF ARCHITECTURE
A.R COMPLEX, FIRST FLOOR,
1090, P.H. ROAD, CHENNAI-84

3. Type of construction permitted/ As per the approved plan. — Residential Apartments / SPL BLDG

4. Details of Approval
   (a) Cmda planning permit no. & date — B/SPL-BLDG / 71 - A to F / 2018
   (b) Chennai Corporation B.L& P.P.A No. & date — Permit No. 11880, Dt 12-4-2018 valid upto 11.4.2023.

5. Detail of set back space provided as per Approved plan.

| | | | |
|---|---|---|---|
| (a) front | (W) | 6.75 m | 6.3 m |
| (b) Rear | (E) | 5.38 m | 6.06 m |
| (c) Side | (N) | 6.07 m | 6.0 m |
| (d) Side | (S) | 6.30 m | 6.08 m |

6. Detail of number of car parking Two wheelers parking etc. Provided as per approved plan. — CAR PARKING - (88) 127; Two wheeler - (20) 127

7. Details of provision of transformer Room in ground floor Asper approved plan — Provided

8. Details of provision of stand by Generator room and Meter room as per approved plan — Provided

9. Details of provision of lifts asper Approved plan. — Provided

10. Details of provision of fire safety Arrangements made to be made with in The building. — Provided

11 .Details of provision of water for drinking Purpose as well as other purpose. — Provided

12 .Details of area of construction and Usage permitted in each floor as per Approved plan.

| FLOOR | Area in | No. Unit | Usage Permitted | Remarks |
|---|---|---|---|---|
| STILT | | | | |
| ~~GROUND~~ / STILT | PARKING | | | |
| FIRST | Residential | 30 | 2549.58 sqm | 2278.97 |
| SECOND | Residential | 32 | 2556.88 sqm | 2424.22 |
| THIRD | Residential | 32 | 2556.88 sqm | 2424.22 |
| FOURTH | Residential | 32 | 2556.88 sqm | 2424.22 |
| ~~FIFTH~~ | | | | |
| | Total : | 126 DU | | 9551.63m |

Signature of Owner
Promoter/Developer
Of building

Signature of
Architect Engineer
Licensed Surveyor

VARSHA P. JAIN (B.arch)
ARCHITECT & INTERIOR DESIGNER
REGD No. CA / 95 / 18498
COUNCIL OF ARCHITECTURE
A.R COMPLEX, FIRST FLOOR,
1090, P.H. ROAD, CHENNAI-84.

9.4.2018

13/04/2018
Signature Of
planning authority
CMDA

அனுப்புநர்

திருமதி.வி.டி.லிமாரோஸ்
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
காட்டாங்கொளத்தூர்.

பெறுநர்

தனி அலுவலர்,
நெடுங்குன்றம் ஊராட்சி/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
காட்டாங்கொளத்தூர்.

ந.க.எண். 1427/ 2018/ அ4 நாள் 28.04.2018

அய்யா,

பொருள் : வரைபட அனுமதி - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி -கொளப்பாக்கம் கிராமம் - நில அளவை எண்கள் 138/1A, 1B மற்றும் 139/3 (பட்டாவின் படி) கொளப்பாக்கம் கிராமம், ஊனமாஞ்சேரி பிரதான சாலை, சென்னை 48-ல் வாகனம் நிறுத்து தளம் + 4 தளங்களுடன் 126 குடியிருப்புகள் மற்றும் முதல் தளத்தில் உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டதை தனி அலுவலருக்கு அனுப்பி வைத்தல் - சார்ந்து.

பார்வை : உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிச்குழுமம், 1, காந்தி -இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 8 அவர்களின் கடித எண். பி2/6042/ 2017 நாள் 12.04.2018

*********

பார்வையில் காணும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குன்றம் ஊராட்சி கொளப்பாக்கம் கிராமம் நில அளவை எண்கள் 138/1A, 1B மற்றும் 139/3 (பட்டாவின் படி) கொளப்பாக்கம் கிராமம், ஊனமாஞ்சேரி பிரதான சாலை, சென்னை 48-ல் வாகனம் நிறுத்து தளம் + 4 தளங்களுடன் 126 குடியிருப்புகள் மற்றும் முதல் தளத்தில் உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடியிருப்பு கட்டிடம் சம்மந்தமான கட்டணங்கள் அனைத்தும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டு பார்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளின் அடிப்படையில் இறுதி ஒப்புதல் வழங்கவும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகள்படி உள்ளதா என்று ஆய்வு செய்து இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டும் பார்வையில் காணும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கடிதம் மற்றும் வரைபடங்கள் (2 Set) 6 நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இக்குடியிருப்பிற்கு இறுதி ஒப்புதல் அளித்த விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
காட்டாங்கொளத்தூர்

நகல்

திருவாளர்கள் எம்.ஆர்.கோவிந்தன் அவர்களின் பொது அதிகாரம் பெற்றவர்கள்
முகம்மது இஸ்மாயில் மற்றும் இம்ரான் தரக் பதார்உா
எண்.J-118, MMDA காலனி,
அரும்பாக்கம், சென்னை - 600 106.

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் நெடுங்குன்றம் ஊராட்சி காஞ்சிபுரம் மாவட்டம்

## நெடுங்குன்றம் ஊராட்சி தனிஅலுவலர் – வட்டாரவளர்ச்சிஅலுவலர் (கிஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திரு. மு.சிவகலைச்செல்வன் அவர்கள்

வட்டாரவளர்ச்சி அலுவலர் (கிஊ)./ தனிஅலுவலர்

நாள் : 07/05/2018

அனுமதி எண் : 07 /2018-2019

நாள்:________

பொருள் - கட்டிடங்கள் – காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி கொளப்பாக்கம் கிராமம், நில அளவைஎண் 138/1A, 1B மற்றும் 139/3, (பட்டாவின்படி) கொளப்பாக்கம் கிராமம். ஊரப்பாக்கம் பிரதான சாலை - செ.48 வாகனம் நிறுத்தும் தளத்துடன் 126 குடியிருப்புகள் மனை எண்________ ஆகியவற்றில் கட்டிடம் கட்டுவதற்கு வீட்டுமனை உட்பிரிவு அனுமதி வழங்க ஆணை பிறபித்தல்.

திருவாளர்கள் - எம்.ஆர். கோவிந்தன் அவர்களின் பொது அதிகாரம் பெற்றவர் ஜெகன்நாத் இளமாயின்(ப) இம்ரான் நரசிம்ஹா.

பார்வை - 1) ________நாளில் திரு/திருமதி ____________________ அவர்களின் கட்டிட விண்ணப்பம்.

2) நகர ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களின் திட்ட அனுமதி ஆணை எண் பி2/6042/2017 நாள் 12/04/18.

3) ஊராட்சியின் கட்டிட வரைபட அனுமதி ரசீது எண் ________, நாள் ________

4) மண்டல துணைவட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் ஆய்வு அறிக்கை நாள்

5, ஆணையாளர், ஊ.ஒ. காட்டாங்கொளத்தூர் ந.க.எண் 1427/2018/அ4 நாள் 24/04/18

ஆணை,

திரு/திருமதி திருவாளர்கள் எம்.ஆர் கோவிந்தன் ஜெகன்நாத் இளமாயின் (ப) இம்ரான் நரசிம்ஹா - என்பவருக்கு கொளப்பாக்கம் கிராம நில அளவை எண் 138/1A 1B மற்றும் 139/3, மனை எண்________ ஆகியவற்றில் கட்டிடம்/ கூடுதல் கட்டிடம்/முதல் தளம் ஆகியவைகள் கட்டுவதற்கு கீழ்கண்ட விதிகளுக்குட்பட்டு வீட்டுமனை உட்பிரிவு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 07/05/2018 முதல் 07/05/2021 தேதி வரை ஓராண்டிற்கு செல்லுபடியாகும்.

அனுமதி கட்டணம்ரூ 5,76,880-00 (ரூபாய் ஐந்து லட்சத்தி எழுபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பது - மட்டும்) செலுத்தியமைக்கான ரசீது மற்றும் அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### வரைமுறைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 7 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 6 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 7 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளிவிடப்பட்டிருக்கவேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல்

வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வதுகூடாது.
4. கட்டிடவேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலைநடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட காலவரையறுக்குள் கட்டிடம் கட்டிட முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனுகொடுத்து அனுமதி பெறவேண்டும்.
6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்டவேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் - நிர்வாகஅதிகாரிக்கு - தனிஅலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்றபிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.
7. கட்டிடம் கட்டஉத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிடவிதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்து தலைவருக்கு- தனிஅலுவலருக்குஉரிமைஉண்டு.
8. புதியதாககட்டப்படும் கட்டிட இடங்கள் எந்தநேரத்திலும் சுத்தமான பொதுசுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருந்தல் அவசியம்
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்
10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும். கழிவுநீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ளவேண்டும்.
11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறுதொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர் செயலர். சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதிபெற்றிருத்தல் வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளவேண்டும்.
13. கட்டிடவேலைமுடிந்தபின்போ அல்லதுகுடியேறியபின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் - தனிஅலுவலர் அவர்களுக்குஎழுத்து மூலமாக தெரிவிக்கவேண்டும்.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்

(கி.ஊ),

தனி அலுவலர்
நெடுங்குன்றம் ஊராட்சி
நெடுங்குன்றம் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

7/05/15

பெறுநர்

திரு/திருமதி

திருவாளர்கள். எம்.ஆர். கோவிந்தன் அவர்களின் பொது அதிகாரம் பெற்றவர்
முகம்மது இஸ்மாயில் மற்றும் இம்ரான் [illegible]
எண் J.118 MMDA காலனி,
அரும்பாக்கம், சென்னை 600106.

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate